1 கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருநெல்வேலி

O.S.No. 68 /2025

2025 வது ஆண்டு செப்டம்பர் மாதம் 04–ம் நாள் வா.சா.3 ன் சாட்சிய வாக்குமூலம் (1969 ம் ஆண்டு 54 வது விதியின் 9 வது (பிரிவின் ஏற்பாட்டின் படி) உதவியாளரால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது/பிரமாணம் செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | திரு.பாலகிருஷ்ணன் | வட்டம் | அனைத்தலையூர் |
| த.பெ | திரு.சுடலை | கிராமம் | |
| வயது | 56 | மதம் | |

04.09.2025 முதல் விசாரணை

நான் இந்த வழக்கிற்கு 3 ம் நபர் ஆவேன். இந்த வழக்கு விபரங்கள் எனக்கு தெரியும். எனது முதல் விசாரணையை நிரூபண வாக்கு மூலமாக தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள சங்கதிகள் நான் சொல்லி தயார் செய்யப்பட்டவை தான். அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான்.

பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

வழக்கு எதற்காக தாக்கல் செய்யப்பட்டது என்ற விபரம் எனக்கு தெரியும். யாருடைய வாரிசு சான்றிதழ் கோரி வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் இசக்கி என்பவரின் வாரிசு சான்றிதழ் கோரி வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இசக்கி என்பவர் எனது சொந்தக்காரர் மற்றும் ஒரே ஊரே சார்ந்தவர் ஆவார். இசக்கி என்பவருக்கு வாரிசு சான்றிதழ் கோரிய மனுவானது இறப்பு சான்றிதழ் மற்றும் போதுமான ஆவணங்கள் இல்லை என்ற காரணத்தினால் நிராகரிக்கப்பட்டது என்ற விபரம் எனக்கு தெரியும்.